Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/’67

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர் சங்.139:1 ஆகஸ்ட் 2018 No.8

## மனந்திரும்புதலின் மூலம் நமது பாவத்திலிருந்து நாம் திரும்ப வேண்டும்

***We must turn from our sin in repentance***

Richmard Owen Roberts

எல்லாக் காலங்களிலும் அதிகமாகப் பேசப்படும் ஒரு பொருள் ‘பாவம்’. இது அடிக்கடி மக்களால் பேசப்படுவது மட்டுமல்ல வழக்கமாக திரள்கூட்ட உலக மக்களால் செய்யப்பட்டும் வருகிறது.

வரக்கூடிய விளைவுகளைப் பற்றிய பயம், மேலும் அவர்களை உண்டுபண்ணின தேவன் அவர்களது ஒழுங்கீனத்தைக் கட்டுப்படுத்தவும், தண்டிக்கவும் உரிமையுள்ளவர் என்ற எண்ணம் போன்றவை இல்லாமல் மக்கள் பாவம் செய்கிறார்கள். இவர்கள் தங்கள் மனச்சாட்சியின் குரலைக் கேட்காமல் சந்தோஷமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கை தங்களுக்கே உரியது என்று எண்ணி தாங்கள் விரும்புகிற எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

சிலர் ஒழுக்கநெறி அந்தஸ்து, சன்மார்க்க பயிற்சி, மார்க்க போதனை ஆகியவற்றால் பாவத்தை முழுமையாக அனுபவிப்பதில்லை. அவர்கள் பாவம் செய்து கொண்டேயிருந்தால் மனச்சாட்சியால் வாதிக்கப்படுவார்கள் என்பதாலும் விளைவுகளைப் பற்றிய பயத்தாலும் பாதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு அவர்கள் பாவத்திற்கு ஒரு தடை போட்டு, தங்கள் செயல்பாடுகளை தாங்களே அமைத்துக் கொண்ட எல்கைகளுக்குள் வைத்து சொகுசாக வாழ்கிறார்கள். பாவம் செய்கிற மக்களோடு தங்களை ஒப்பிட்டு அவர்களைவிட நன்கு மதிக்கப்படுவதாகக் கருதுகிறவர் கள் மனந்திரும்புதல் என்ற முக்கிய வேத சத்தியத்தை அறியார்கள்.

### வேதபுத்தகத்தின் கண்ணோட்டத்தில் பாவமும் மனந்திரும்புதலும்

மனித சரித்திரத்தில் சன்மார்க்க நெறியின் அந்தஸ்து ஒன்று போலிருந்ததில்லை. அதில் உயர்வுகளும் தாழ்வுகளும் ஏற்பட்டுள்ளன. காலனிகளுள்ள அமெரிக்காவின் சன்மார்க்க நிலை இன்றைய நிலையை விட வித்தியாசமானது. இன்றைய பொதுமக்களின் பாவநிலை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு போல இருக்கவில்லை. இவ்வாறு பாவம் நிறைந்த சமுதாயத்தில் பரிசுத்த வேதாகமம் ஒரு முக்கிய இடம் பெற வேண்டும். வேதபுத்தகத்தைப் படிக்கிறவர்களுக்கு அது பாவத்தைக் குறித்து அதிகமாகப் பேசும் என்பது தெரியும். உலகத்திலேயே பாவத்தைக் குறித்துத் தெளிவாக அறிவிக்கும் ஒரே புத்தகம் இது. பாவத்தைக் குறித்த வேத அடிப்படையிலான கருத்துக்கள் எதிர்மறையாயிருப்பதால் பாவம் நிறைந்த சமுதாயம் இதை விரும்புவதில்லை. பாவத்தால் சோர்படைந்து விடுதலைக்காக வாஞ்சிக்கிற மக்கள், ஒரு புது ஆரம்பத்தை வாஞ்சிக்கும் போது வேதபுஸ்தகம் விரும்பப்படுகிறது.

அனைத்து பாவமும் தேவனுக்கு எதிரானது என்ற உண்மையில் வேத அடிப்படையிலான மனந்திரும்புதல் தொக்கி நிற்கிறது. நம்மில் எவருக்கும் தேவனைத் துக்கப்படுத்தும் உரிமை இல்லை. நாம் நமது பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். சன்மார்க்க ஆவிக்குரிய வீழ்ச்சியின் காலத்தில் மனந்திரும்புதலைக்குறித்து அக்கறை கொள்வதில்லை. சபை மனந்திரும்புதலைக் குறித்து உலக மக்களைவிடக் கூடுதலாக அறியாமலிருப்பதால் ஒரு விழிப்புணர்வு மிக அவசியம். ‘மனந்திரும்புதல்’ என்ற பதம் நமது மார்க்க சொற்றொடரில் இருந்தாலும் அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு கவலையீனமாக உதாசீனப்படுத்தப்படுவது துக்கமானது.

### மனந்திரும்புதல் ஏன் புறக்கணிக்கப்படுகிறது?

**1. பொதுவான ஒரு உதாசீனம் சபையில் வேத உபதேசங்களுக்கு எதிராகக் காணப்படுகிறது:**

மார்க்கத் தலைவர்கள் “நீங்கள் தத்துவங்களைப் பேசக்கூடாது, இன்று கிறிஸ்தவம் வளரத் தடையாயிருப்பது கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமையில்லாதிருப்பதுதான். தத்துவங்களை அழுத்துவதால்தான் ஐக்கியக் குறைவு ஏற்படுகிறது” என்கிறார்கள். ஆம் வேதபுத்தகத்தின் அடிப்படை உபதேசங்கள் பிரசங்கிக்கப்பட்டால் வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் பிரிக்கப்படும். ஜாக்கிரதையோடு உபதேசம் கொடுக்கப்படாவிட்டால் மாம்சீகமானதும் ஆவிக்குரியதுமான மக்களை பயன்படும் முறையில் போதகர் வழிநடத்த முடியாது. மேலும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படும் கலவையின் மூலம் உலகம் இயேசுவில் நம்பிக்கை வைக்க முடியாது. கிறிஸ்துவின் செம்மறியாடுகளும், இவ்வுலகத்தின் வெள்ளாடுகளும் ஒரே கூரையில் மாதக் கணக்கில் ஒரே உணவை உண்ணமுடியாது.

தேவனுடைய சபையில் தேவ பிரசன்னம் விளங்கினால் மட்டுமே சபை வளரமுடியும். இன்று தூய ஆவியானவர் சபையைவிட்டு விலகி அது தன் போக்கில் செல்லும்படி விட்டுவிட்டார். சபை அவரது வசனத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டபடியால் அவர் துக்கமடைந்துவிட்டார். தேவனுடைய இதய கதறல் “என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்கு திரும்புவேன்” மல்.3:7 என்பதாகும்.

**2. சபையின் பகுதிகள் வேத சத்தியங்களைப் போதிப்பதில் நம்பிக்கை வைத்திருந்தாலும் மனந்திரும்புதலின் உபதேசத்தை உதாசீனம் பண்ணுவது துக்கமானது:**

மனந்திரும்புதல் அவசியம் என்கிறவர்களும் அதற்குரிய சரியான முக்கியத்துவத்தை அளிப்பதில்லை. வேத அடிப்படையிலான மனந்திரும்புதலை புரிந்து கொள்ளாததும், செயல்படுத்தாததுமான மனந்திரும்புவோரை உருவாக்குகிறார்கள். எனவே சபையின் உறுதி மனந்திரும்பாததும், மறுபடியும் பிறவாததுமான மக்களால் குன்றிவிட்டது. அவர்களும் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணுகிறபடியால் சபையில் குழப்பம் ஏற்படுகிறது. எந்த நன்மையும் ஏற்படாத நிலையில் சபை காணப்படுகிறது.

**3. மனந்திரும்புதலின் அர்ப்பண தன்மையை சபை புரிந்து கொள்ளுவதில் பொதுவான தோல்வி பெருகி வருகிறது:**

மனந்திரும்புதல் என்பது ஒருவரது விருப்பத்தைப் பொறுத்தது என்று சிலர் கூறலாம். ஒருவர் மனந்திரும்பலாம் அல்லது மனந்திரும்புதல் கட்டாயம் என்று அவர்கள் கூறினாலும் அது அர்ப்பணச் செயல் என்று ஒத்துக் கொள்வதில்லை. இதன் விளைவாக திரளான மக்கள் தங்கள் பாவத்திலிருந்து திரும்பாமலேயே கிறிஸ்துவிடம் திரும்புகிறார்கள். இதனால் சபையையும் உலகத்தையும் பிரித்தறிய முடிவதில்லை.

**4. அழிவுக்கு நடத்தும் தத்துவங்கள் பரவலாக போதிக்கப்பட்டு பிரசங்கிக்கப்படும் அபாயம் பலரில் உருவாகியுள்ளது:**

இந்த கண்ணோட்டத்தின்படி இரட்சிப்புக்கு மனந்திரும்புதல் அவசியமல்ல என்று தவறாகப் போதிக்கப்படுகிறது. மனந்திரும்புதல் என்பது ஒரு ‘வேலை’ என்பது அவர்களது கோட்பாடு. கிரியையினாலல்ல விசுவாசத்தினால் இரட்சிப்பு வருகிறது என்று அவர்கள் கூறினாலும் விசுவாசத்திற்கும் மனந்திரும்புதலுக்குமுள்ள தொடர்பை அவர்கள் வலியுறுத்துவதில்லை. பாவிகள் நீதியுள்ள தேவனிடம் திரும்ப தங்கள் சொந்த நீதியிலிருந்து திரும்ப வேண்டிய

(3-ம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்

***The obedience of Christ***

Andrew Murray

"அன்றியும் ஒரே மனுஷனுடைய ...... ஒருவருடைய கீழ்படிதலினாலே அனேகர் நீதிமான்களாக்கப் படுவார்கள்" ரோமர் *5:19.* ஆதாமில் நாம் பாவிகளானோம் ஆனால் கிறிஸ்துவில் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம்.

கிறிஸ்துவில் நாம் நீதிமான் களாக்கப்பட்டபடியால் நாம் அவருக்குக் கடமைப்பட்டவர்கள். ஆதாமின் கீழ்ப் படியாமை நம்மைப் பாவிகளாக்கினது போல கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் நம்மை நீதிமான்களாக்குகிறது. கிறிஸ்துவின் கீழ்ப்படிதலுக்கு நாம் எல்லாவற்றிலும் கடமைப்பட்டவர்கள்.

கிறிஸ்துவில் நாம் சவதரித்த பொக்கிஷங்களில் இது மிகுந்த ஐசுவரிய மானது. எத்தனைபேர் இதை இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. எனவே அவர்கள் இதனை நேசிக்கவும், இதில் களிகூரவும், இதன் முழு ஆசீர்வாதத்தை பெறவும் கூடாதிருக்கிறார்கள்.

தமது பணியில் கிறிஸ்து நமது இரட்சிப்பிற்காகக் காண்பித்திருக்கும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ளும்போது அது மீட்பின் ஆணிவேராயிருக்கிறது என்று அறியலாம் அதற்கு நமது இரு தயத்திலும், வாழ்விலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

ஒரு மனிதனின் கீழ்ப்படியாமை யினாலே அனேகர் பாவிகளாக்கப் பட்டார்கள். இது எப்படி?

தேவன் ஆதாமிடம் எதிர்பார்த்தது கீழ்ப்படிதல். ஒரு சிருஷ்டி தேவனை மகிமைப்படுத்தவும் அவரது ஆசீர்வாதங்களைப் பெறவும் ஏதுவாயிருப்பது கீழ்ப்படிதல். பாவத்தின் வலிமை உலகில் வெளிப்பட காரணமாயிருந்தது கீழ்ப்படியாமை. பாவத்தினால் வந்த சாபம் அனைத்திற்கும் காரணம் கீழ்ப்படியாமை. பாவத்தின் முழு வலிமையும் நம்மில் செயல்பட காரணமாயிருப்பது ஆதாமிலிருந்து நாம் பெற்றுக்கொண்ட கீழ்ப்படியாமை. நாம் கீழ்ப்படியாமை யின் பிள்ளைகளாகப் பிறந்திருக்கிறோம்.

இந்த கீழ்ப்படியாமை அதன் சாபம், ஆளுகை, தீமை யாவும் நீக்கப்பட கிறிஸ்து இவ்வுலகில் வந்தார். கீழ்ப்படியாமை எல்லாப் பாவங்களுக்கும், துயரங்களுக்கும் ஏதுவாயிருப்பதால் இரட்சிப்பின் முதல் பணி இத்திய வேரை அழித்து மனிதனை அவனது பழைய இடத்திற்குக் கொண்டு வருவது அல்லது தேவனுக்குக் கீழ்ப்படியும் ஒரு வாழ்வை அளிப்பதாகும்.

## கிறிஸ்து இதனை எப்படிச் செய்தார்?

முதல் ஆதாம் செய்ததை முறியடிக்க இரண்டாம் ஆதாம் உலகில் வந்தார். தேவனை அறிய நாடுவதும் அவர் சித்தம் செய்வதும் தரம் தாழ்ந்தது என்று பாவம் நம்மை எண்ண வைத்துவிட்டது. ஆனால் கிறிஸ்து வந்து கீழ்ப்படிதலின் ஆசீர்வாதம், பரலோக தன்மை ஆகியவற்றை காண்பித்தார்.

தேவன் சிருஷ்டிப்பில் நமக்கு அளித்த ஆடை அழகும், கறையற்றதும், பரிசுத்தமானதுமான கீழ்ப்படிதல். கிறிஸ்து இதைத் தரித்தவராய், நாம் இதை எப்படி அணிய வேண்டும், அதன் மூலம் எப்படி தேவமகிமையின் பிரசன்னத்தில் செல்லவேண்டும் என காண்பித்தார். கிறிஸ்து நமது கீழ்ப்படியாமையை தமது கீழ்ப்படிதலினாலே மாற்றிவிட்டார். ஆதாமின் கீழ்ப்படியாமை சர்வ லோகத்தையும் பாதித்தது. ஆனால் கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் அதை மேற்கொண்டது.

கிறிஸ்துவின் வாழ்வில் கீழ்ப்படிதல் மூன்று பயன்களையுடையது. *1.* உண்மையான கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதை ஒரு எடுத்துக்காட்டாகக் காண்பிக்க. *2.* அவரது கீழ்ப்படிதலினால் எல்லா நீதியையும் நமக்காக நிறைவேற்றுவதற்கான ஒரு உறுதி. *3.* ஒரு தலையாயிருந்து நம்மில் புதிதும் கீழ்ப்படிதலுமான தன்மையை நம்மில் உருவாக்குதல்.

## கீழ்ப்படிதல் என்பது இரட்சிப்பு

கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் ஒன்றே அவரில் நான் காணும் நீதிக்கும் இரட்சிப்புக்கும் இரகசியமாயிருக்கிறது. நீதியின் சாரம் கீழ்ப்படிதல். கீழ்ப்படிதலே இரட்சிப்பு. அவரது கீழ்ப்படிதல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நம்பப்பட்டு அதில் களிகூரவேண்டும். இவ்வாறு கீழ்ப்படியாமை முடிவுற்றது. ஆதாமின் கீழ்ப்படியாமை முன்பு என்னை ஆண்டு கொண்டது போல இப்போது மரணத்தின் வல்லமை எனது புதிய தன்மை உருவாக ஜீவ வல்லமை யாக மாறிவிட்டது.

கீழ்ப்படிதலுக்கு என்னை பணியச்செய்வது தேவனோடுள்ள உறவும், நீதியும் தொடர ஒரு வழியாயிருக்கிறது. நீதிக்காக கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் வாழ்வின் ஆரம்பம் மட்டுமே. நீதிக்காக எனது கீழ்ப்படிதல் அதன் தொடர்ச்சியாகும். தலைக்கும் அவயவங்களுக்கும் ஒரே பிரமாணமுண்டு. ஆதாமும் அவனது வித்திற்கும் கீழ்ப்படியாமையும், மரணமும் நிச்சயமாயிருப்பது போல கிறிஸ்துவிற்கும் அவரது வித்திற்கும் கீழ்ப்படிதலும் ஜீவனும் நிச்சயம்.

## கிறிஸ்துவின் கீழ்ப்படிதலின் அடையாளங்கள்

கிறிஸ்துவில் இந்த கீழ்ப்படிதல் ஜீவனின் கொள்கையாயிருந்தது. கீழ்ப்படிதல் என்பது எப்போதாவது அல்லது தொடர்ந்த செயல்பாடுகளல்ல. ஆனால் அது கிறிஸ்துவின் முழுமையான வாழ்வின் ஆதாரமாயிருந்தது. "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்" யோவா.*6:38* "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்" எபி.*10:9.* அவர் தேவசித்தம் நிறைவேற்ற மட்டுமே இவ்வுலகில் வந்தார். அது அவரது உயரிய நோக்கமாயிருந்தது. அவரது வாழ்வின் அனைத்துக் கட்டுப் பாடுகளுக்குமான வலிமை அவரது கீழ்ப்படிதலே.

## நாமும் அப்படியிருக்க அவர் விரும்புகிறார்

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும், தாயுமாய் இருக்கிறான் என்றார்" மத்.*12:50.*

ஒரு குடும்பத்தின் தொடர்பு என்பது பொதுவாக எல்லாவற்றையும் பகிர்ந்து செய்வதாகும். அது போல கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள தொடர்பு நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

**கிறிஸ்துவில் இந்தக் கீழ்ப்படிதல் அவருக்கு சந்தோஷமாயிருந்தது:** "என்னை அனுப்பினவருடைய சித்தம் செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது யோவா.*4:34.* "என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" சங்.*40:8.*

உணவு புத்துணர்வு தந்து நம்மை பலப்படுத்துகிறது. ஆரோக்கியமுள்ள மனிதன் தன் உணவை மகிழ்ச்சியுடன் புசிக்கிறான். உணவு மகிழ்ச்சியைக் காட்டிலும் மேலானது. ஏனெனில் அது வாழ்வுக்கு இன்றியமையாதது. ஆகவே தான் இயேசு தேவசித்தம் செய்வதே தமது உணவு என்றார். அதின்றி அவரால் வாழமுடியாது. அதுவே அவரை புத்துணர்வூட்டி, பலப்படுத்தி சந்தோஷப் படுத்துவதாயிருந்தது.

**கிறிஸ்துவில் கீழ்ப்படிதல் தேவசித்தத்திற்குக் காத்திருக்க வழிநடத்தியது:** தேவன் தமது சித்தத்தை முழுவதும் ஒரேயடியாக கிறிஸ்துவுக்கு வெளிப்படுத்தவில்லை. கிரமம் கிரமமாக சூழ்நிலைக்கேற்ப வெளிப்படுத்தப்பட்டது. அவரது வாழ்வில் கீழ்ப்படிதல் வளர்ச்சியும், முன்னேற்றமுமுடையதாயிருந்தது. மிகக் கடின பாடங்கள் கடைசியில் வந்தன. ஒவ்வொரு கீழ்ப்படிதலின் செயலும் அடுத்த கட்டளையைக் கண்டுபிடிக்க ஏதுவாயிருந்தது. "என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" சங்.*40:8.*

இக்கீழ்ப்படிதல் நமது வாழ்வின் வாஞ்சையாகி, தேவ ஆவியால் நமது செவிகள் திறக்கப்பட்டு, அவரது போதனைகளுக்குக் காத்திருந்து அவரது தெய்வீக வழிநடத்துதலுக்கும் தெய்வீக சித்தத்திற்கும் நடத்திச் செல்லும்.

**கிறிஸ்துவில் இக்கீழ்ப்படிதல் மரணம் மட்டும் காணப்பட்டது:** "எனது சொந்த சித்தம்

(8-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

தபால் சலுகை இல்லாதபடியால்
வருகையின் தூதன் பத்திரிகைக்கு
சந்தா கிடையாது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமில்லை என்று கூறுவது அர்த்த மற்ற உபதேசம். இவ்வாறு மனந் திரும்புதலை ஒரு 'கிரியை' என்று போதிப்பவர்கள் தூயவரை உதாசீனம் பண்ணுகிறார்கள். இந்த பயங்கர பாவம் சபையின் பெரும்பாலான பகுதி முழு வதும் அழிவதற்கு ஏதுவாயிருக்கிறது.

**5. நேர்மறையான காரியங்கள் மீது மாறுபட்ட பார்வை ஏற்படுவதால் மனந்திரும்புதல் புறக்கணிக்கப்படுகிறது:**

கிறிஸ்தவம் நேர்மறை பதங்க ளால் மட்டும் குறிப்பிடப்பட வேண்டும் என்ற ஒரு பரவலான கருத்து இருக்கிறது. 'நீங்கள் ஏதேனும் நேர்மறையாக சொல்ல முடியாவிட்டால் எதுவுமே சொல்ல வேண்டாம்' என்ற அளவில் இந்நிலை வந்துவிட்டது. விசுவாசம் நேர்மறையா னது. ஆனால் மனந்திரும்புதல் எதிர் மறையானது. உங்கள் வாகனத்தைப் பழுதுபார்க்க நேர்மறை கண்ணோட்ட முள்ள ஒருவரிடம் செல்கிறீர்கள். அவர் தவறுகளைக் கண்டுபிடிக்க முடியாவிட் டால் பழுதுபார்க்க முடியுமா? அல்லது உங்கள் மருத்துவர் ஒருபோதும் ஒரு தவறையும் உங்களில் கண்டுபிடிக்க முடியாவிட்டால் அவர் உங்களை ஆரோக்கியமுள்ளவராக்க முடியுமா?

**6. சபையின் பெருமளவிலான வெற்றி ஆர்வம் மனந்திரும்புதல் முக்கியத்துவம் பெறாமல் தடுக்கிறது:**

சபைத் தலைவர்கள் ஊழியத்தில் வெற்றிக்காக வாஞ்சித்துத் தங்களை அர்ப்பணிக்கிறார்கள். அவர்கள் நோக்கம் நிறைவேற மார்க்க சத்தியங்களையும் ஆடம்பரங்களையும் பயன்படுத்துகிறார் கள். தேவ அன்பு, மனித சந்தோஷத்தில் அன்பின் பங்கு, பரிசுத்த வாழ்வின் ஆசீர்வாதம், மனித உயர்நிலை நபரத்து வம் ஆகியவை பெரிய சபைகளைக் கட்ட உதவியாயிருப்பது போல் காணப் படுகின்றன. பாவத்தைக் கண்டித்தல், மனந்திரும்புதல், நியாயத்தீர்ப்பு, நரகம் ஆகியவற்றைக் கண்டித்து உணர்த்துதல் ஆகியவை அதிகமாகக் காணப்படுவ தில்லை. அதன் விளைவாக இத்தகைய சபைகளில் உண்மையான ஊழியமும், தேவ ஆசியானவரின் கிரியையும் காணப் படுவதில்லை. சபைக்குச் செல்லும் ஆயிரக்கணக்கானோருக்கு மனந்திரும்பு தல் அவசியம் என்பது தெரியாது. தூய ஆவியானவரின் கிரியையால் ஏற்படும் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித் தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உணர்வு ஏற்படுவதில்லை யோவா.16:8-11. பாவ உணர்வு ஏற்படாவிட்டால் மனந் திரும்புதலும் தொடர்ந்து மனமாற்றமும் ஏற்படுவதில்லை. பாதாளத்தின் வாசல் கள் இவ்வகையான சபைகளை மேற் கொண்டுவிடு.

**7. மார்க்க தலைவர்களிடம் சன்மார்க்க உத்தமம் குறைந்துவிட்டது:**

மனந்திரும்புதல் சரியாக போதிக்கப்பட்டாலும் சன்மார்க்க வலிமையோடும் ஆவிக்குரிய கரிசனை யோடும் செய்யப்படாததால் ஒரு சிலர் மட்டுமே மனந்திரும்புதலின் அவசரத்தை உணர்ந்து செயல் படுகிறார்கள்.

## தேவன் நமக்கு எதிராகயிருந்தால்

இவ்வாறு வேத உபதேசத்தை நாம் ஒதுக்கிவிட்டால் தேவன் என்ன நினைப்பார்? இது ஒரு புதிய யுகம், பழைய சத்தியங்கள் பொருத்தமற்றவை என்று புன்னகை புரிவாரா? அல்லது தமது திட்டங்களை தங்கள் சொந்த வழி களிலே நிறைவேற்றுபவர்களுக்கு எதிராக எழும்புவாரா?

தேவனுடைய பழைய வழி களை விட்டு விலகுகிறவர்களுக்கு தேவன் எதிரானவர் என்று வேதம் சொல்லுகிறது. வழிதவறிப்போனவர் களுக்கு அவர் எதிராயிருப்பது மட்டு மல்ல அவர்களை ஆசீர்வதிக்க மறுக் கிறார். ஏனெனில் அவர்கள் அவரது பிரமாணங்களை மீறி அவரது வழியை யும், வார்த்தையையும் விட்டுவிட்டார் கள். வழிவிலகிய இஸ்ரவேலரைக் குறித்து ஏசாயா, "அவர்களோ கலகம் பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள், அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி அங்கே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்" ஏசா.63:10 என்று குறிப்பிடு கிறார். அடிக்கடி சபைத் தலைவர்கள், தேவன் நமது பட்சத்திலிருந்தால், யார் நமக்கு எதிராக நிற்க முடியும்? என்று கேட்கிறார்கள். ஆனால் தேவன் நமக்கு எதிராக இருந்தால் நமது பட்சத்தில் யார் நிற்கமுடியும் என்று கேட்டுப்பாருங்கள். இந்நாட்களில் தேவனை நாம் அதிக மாகப் புறக்கணித்து அவர் நமக்கு எதிராக யுத்தம் பண்ணவேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டோம். எரே.5:20 - 6:21 வரையுள்ள வசனங்களில் இஸ்ரவேல் பூர்வ வழிகளை விட்டு விலகியபோது அதன் மீது அழிவைக் கொண்டு வருவதாகக் கூறினார். இவ் வாறு தேவன் நமக்கு அழிவைக் கொண்டு வருவதானால் அதைவிட பயங்கரமான அழிவு எதுவும் இருக்க முடியாது.

## எச்சரிப்பின் இரு வார்த்தைகள்

1. "நீங்கள் கேட்கிறதை கவனியுங்கள்" மாற். 4:24.

2. "ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள்" லூக்.8:18.

இவை நமக்கு முக்கிய பொறுப்பு களைத் தருகின்றன. நாம் கேட்கிற ஆவிக்குரிய காரியங்கள் நமக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சிலர் தாங்கள் கேட்பதைக் குறித்து கவலையீ னமாக இருப்பதால் ஆரோக்கியமற்ற தும், பயனற்றதுமான போதனைகளுக்கு செவிசாய்த்து இறுதியில் ஆவிக்குரிய வாழ்வில் வாடிப் போகிறார்கள். மற்றவர் கள் திடமான ஊழியத்திலிருந்தாலும் கேட்கிறதில் கவனமில்லாதபடியால் ஆவிக்குரிய வளர்ச்சி குன்றி சிலவேளை களில் முன்பு பெற்றுக்கொண்ட நன்மை களையும் இழந்துவிடுகிறார்கள்.

கவனக்குறைவான கவனிப்பா ளர்கள் ஒருபோதும் எதைக் கேட்கி றோம் எப்படிக் கேட்கிறோம் என்று கற்றுக்கொள்ள சிரத்தை எடுப்பதில்லை. அது போலவே கவலையீனமாக வாசிக் கிறவர்களும் எதை வாசிக்கிறோம் எப் படி வாசிக்கிறோமென்று கவனிப்பதில் லை. சிலர் பயனற்ற காரியங்களைப் படிக் கிறார்கள். மற்றவர்கள் முக்கிய மானவை களை வாசித்தாலும் அவை அவர்களில் நிலையான மாற்றங்களை ஏற்படுத்துவதில்லை

கவனிக்கிற தேவ பிள்ளைகளை தேவன் தேடுகிறார் சங்.81:8-13 வசனங் களில் ஆசாபின் வார்த்தைகளை வாசிப் போம்.

ஒரு வாலிபன் கிறிஸ்தவ பணி களைக் குறித்த நல்ல ஒரு வாசிப்பு சாலையைப் பெற்றுக்கொண்டான். அவன் புஸ்தகங்களை நன்கு வாசித்து அவைகளைக் குறித்துப் பிறரோடு விவாதிப்பது வழக்கம். அவன் கிறிஸ்தவ உபதேசங்களை நன்கு கற்றுத் தேறினான். தேவன் தன்னை சுவிசேஷத்தை அறிவிக் கும்படி அழைத்தார் என்றும் கூறி வந் தான். ஆனால் தன் சொந்த மனைவி யையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டு இன்னொரு பெண்ணோடு வாழ்ந்தான். எந்த அளவிலே நாம் கற்றுக்கொண்டா லும் அது கீழ்ப்படிதலுக்கு இணையா காது யாக்.1:23-25 வசனங்களைப் படிக்க.

ஒருவேளை கடந்த காலங்களில் ஆவிக்குரிய காரியங்களுக்கு நீங்கள் முக் கியத்துவம் கொடுக்காமலிருந்திருக்கலாம். வேத வசனங்களையும், கிறிஸ்தவ உப தேசங்களையும் நன்கு கவனியாதிருந்தி ருக்கலாம். ஆனால் இனி இவ்வாறு இருக்க வேண்டாம். ஆனால் வேத உபதேசங்கள் மிக முக்கியமானவை. நீங்கள் அவற்றை சிரத்தையோடும், ஜெபத்தோடும் கருத் தில் கொள்ள வேண்டும். வேத புத்தகத் தின் சிறந்த மாணவர்களாகத் திகழ வேண்டும். நீங்கள் படிக்கிற காரியங் களை நெருங்கிய கவனத்தோடு படிக்க வேண்டும். ஊக்கமான ஜெபத்தோடு வாசித்து, அதைப் புரிந்து கொள்வது மட்டுமல்ல, அனுபவத்திலும் மனந்திரும்பு தலையும், தேவ கிருபையையும் அனு தின வாழ்வில் அனுபவிக்க வேண்டும்.

உங்கள் மனந்திரும்புதலைக் குறித்துப் பெருமை பாராட்டாதபடி எச்சரிக்கையாயிருங்கள். சிலர் தங்களது மனந்திரும்புதலை மேன்மையாகக் குறிப்பிட்டு பிறரது மனந்திரும்புதல் தங் களுக்கு இணையாகாது என்று அற்பமாக எண்ணுவதுண்டு. இது புத்தியீனம். கிறிஸ்து மட்டுமே நமக்கு மாதிரி. சிலர் தேவனுடைய தயவைப் பெற்றுவிட்ட தாகப் பெருமை பாராட்டுகிறார்கள். இது தவறானது. மனந்திரும்புதல் கிறிஸ்து தரும் கிருபை. அதனால் தேவன் மட்டுமே மகிமைப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் சபை பெருமை பெற்ற போதெல்லாம் அது வேதவசனத்திற்கு உத்தமமாயிருந்தது என்பதும் வெளிப்படுகிறது. சபை பின்வாங்கிப் போன நாட்களிலும் கூட அது மனந்திரும்புதலின் உபதேசத்தை விலையேறப் பெற்றதாகக் கருதியதும் அதன் மூலம் தேவன் அவைகளை உயிர்ப்பித்தார் என்றும் அறிகிறோம்.

# பரலோகம் அனுப்புகிற எழுப்புதலுக்கான ஆயத்தம்

**Preparation for Heaven - Sent Revival**

Alwhiltinghill

உலகத்தின் அபாயகரமான சூழலையும், சபையின் உண்மையான நிலையையும் சரியாகக் கவனிக்கிற வர்கள் தேவபிள்ளைகள் மத்தியில் பரலோகம் அனுப்புகிற எழுப்புதல் மிக அவசரம் என்பதை மறுக்கமாட்டார்கள். இன்றைய சபை இந்த அந்தகார காலகட்டத்தின் சவால்களுக்குப் பதில் அளிக்கவோ இத்தலைமுறையினருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தமான தேவையை சந்திக்கவோ கூடாது. சபை ஆண்டவரின் புதிய உயிர்த்தெழுதலின் ஜீவன், எழுப்புதலின் வலிமை ஆகியவற்றின் மகிமையான தொடுதலை அனுபவிக்க வேண்டும்.

சபையின் சரித்திரத்தில் அது குறிப்பிடத்தக்க அனேக மிகப்பெரிய எழுப்புதல்களைக் கடந்து வந்துள்ளது. அதற்கு உலகமெங்குமுள்ள தேவ பிள்ளைகள் 2 நாளா.7:14-ல் கூறப் பட்டபடி தங்கள் முகத்தை அவருக்கு நேராகத் திருப்பி வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொண்டார்கள்.

உண்மையான ஒவ்வொரு விசுவாசியும் தான் தேவனோடு ஆழமான, பரிசுத்த நிறைவான ஐக்கியத்தோடு வாழ அழைக்கப்பட்டவன் என்பதை அறிவான். அவரது குமாரனில் அவரது மகிமையான வாழ்வுக்கு நாம் பங்காளிகள். ஆனால் சில வழிதவறுதல்களாலும், தற்காலிகமாக சுயநல சிந்தைக்கு நம்மை விட்டுவிடுவதாலும் ஆவிக்குரிய வாழ்வில் தடுக்கல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு தேவனை விட்டு விலகுவது 'பாவம்' என்று வேதம் கண்டிக்கிறது. தேவ பிரசன்னத்தையும், அவரது நிலையான வாழ்வின் நம்பிக்கையையும் நாம் அனுபவிக்கத் தடையாக நமக்குள்ளும், எல்லாப் பக்கங்களிலும் விரோதிகளுண்டு.

நமது தேவன் எரிச்சலுள்ளவர். அவர் எதிரிகளின்றி அவரையே தமது ஜனங்கள் நேசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். பாவம் பரிகரிக்கப்பட வேண்டும். அறிக்கை பண்ணப்படாத பாவம் அல்லது விக்கிரகாராதனை தேவ பிள்ளையின் வாழ்வில் நுழைய அனுமதிக்கும்போது அவரது பிரசன்னம் இழக்கப்படுகிறது. தேவன் தமது இரக்கத்தால் நம்மை அழைக்கிறார். ஒரு கட்டின் அனுபவம், அல்லது பாரம், மற்றும் விவரிக்க முடியாத தனிமை ஆகியவை நம்மில் பெருகி நமது வாழ்வின் பல பகுதிகளில் பெருஞ்சேதத்தை விளைவிக்கின்றன. ஆனால் அவர் நேசிக்கிற மக்கள் உணர்வடைந்து முழு இருதயத்தோடும் அவரண்டை திரும்பும் வரை அவரது தண்டனை தொடரும். நமது கவனம் அவருக்கு நேராகத் திரும்பும்படி நம்மை பார்த்து மனந்திரும்பி விசுவாசத்தில் வளர கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்த உண்மையை 2 நாளா.7:14 நமக்கு விளக்குகிறது.

இதற்கு ஆதாரமான 2 நாளா.6-ம் அதிகாரம் ஒரு ஜெபமாக அமைகிறது. சாலோமோன் தனது ஜனங்களுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறார். எதிர்காலத்தில் அவர்கள் தேவனை ஆராதிக்கத்தவறி, வேறு காரியங்கள் அவர்களைக் கட்டுப்படுத்துமானால் அவர்கள் மீது கருணைகாட்டும்படி அவர் ஜெபிக்கிறார். பின்பு இரவில் தேவன் சாலோமோனுக்குத் தரிசனமாகி ஜனங்கள் நிபந்தனைகளை நிறைவேற்றினால் அவர்களோடுள்ள உறவை மறுபடியும் தொடர்வதாக உறுதிசெய்கிறார். அவர்கள் பாவங்களையும் மன்னிக்க வாக்களிக்கிறார். மக்களின் பாவத்தால் கடின நாட்களை அனுபவித்த தேசமும் க்ஷேமமடையும். முழுமையாகவும் நேர்மையாகவும் மக்கள் திரும்பினால் எல்லா நிலைகளிலும் ஆசீர்வாதம் வாக்களிக்கப்படுகிறது. இது உண்மை என்பது பல தேவ பிள்ளைகளின் வாழ்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

'என் ஜனங்கள்' என்பது சபையைக் குறிக்கிறது. அவருடைய நாமத்தால் அறியப்பட்டவர்கள். 'அவர்கள் ஏதோ செய்தால் நானும் ஏதோ செய்வேன்' என்று தேவன் சொல்லுகிறார். உலகத்தை மாற்றியமைத்துவிட்டால் எல்லாம் நன்றாகிவிடும் என்று எண்ணுகிறோம். உலகத்தின் எதிர்காலத்திற்கு சபை பொறுப்பாயிருக்கிறது. உலகம் இதை சீர்படுத்த முடியாது. தம்மைப் போன்ற இருதயமுள்ள மீட்கப்பட்ட பிள்ளைகள் மட்டுமே எழுப்புதலுக்குக் காரணமாயிருக்க முடியும். அவர்கள் வாக்குத்தத்தத்திற்குரிய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். தேவையை நாம் உணரும்போது ஆண்டவர் நமது உள்ளத்தில் தரும் நிவிர்த்திக்கான ஆயத்தம் செய்ய வேண்டும்.

நாம் நிபந்தனைகளை நிறைவேற்றும்போது அவரது செயல்பாட்டினையும் எதிர்பார்க்கலாம். உடன்படிக்கையைக் காக்கும் தேவனது வாஞ்சை அவரது பிள்ளைகள் உண்மையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். அதற்கு அதற்குரிய சவால்களையும் நாம் எதிர்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர் தமது ஆவியை சபையின்மீது ஊற்ற முடியும். இந்த வசனம் நாம் தனிப்பட்ட முறையில் கவனிக்க வேண்டிய காரியங்களோடு சபையாகச் செய்ய வேண்டிய காரியங்களையும் சுட்டிக் காண்பிக்கிறது.

**நாம் நம்மைத் தாழ்த்த வேண்டும்:-**

தாழ்த்துதல் என்பதற்கான பத்து எபிரேய பதங்களில் இக்குறிப்பிட்ட பதம் 'மேற்கொள்', 'தோற்கடி', 'தாழ்மைப்படுத்து' என்ற கருத்துக்களைத் தருகிறது. இதன் அடிப்படை வார்த்தை 'முழங்காலை முடக்குவது' என்ற பொருளுடையது. அதாவது தேவனுக்கு முன்பாக முற்றிலும் நாமாகவே அர்ப்பணித்து வருவதாகும். சிலுவைக்கு முன்பாக புதிதான ஒரு அர்ப்பணம் அல்லது இதயம் நொறுங்குதல் என்று சொல்லலாம். நமது பெருமையிலிருந்து நாம் திரும்ப வேண்டும். நாம் அவரோடு ஒப்புரவாகி நமது முழு வாழ்வையும் அவருக்கு முன்பாகத் திறந்தளிக்க வேண்டும். அப்போது அவர் நமது இருதயத்தை ஆராய்ந்து நம்மிலிருக்கும் பெருமை, சுயநலம் ஆகியவற்றை வெளிப்படுத்துவார். நமது பெருமைதான் நமக்கு மிகுந்த தடைக்கல்லாயிருக்கிறது. நமது தேவன் யார்? நாமா அல்லது நமது இரட்சகரா?

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாக சாலமோன் முழங்காற்படியிட்டு ஜெபித்தான். நாம் தேவனுக்கு முன்பாக உத்தமமாயிருக்கிறோமா? முழங்கால்களை முடக்கி இணைந்து நம்மைத் தாழ்த்துவோம். 'நாம்' மடங்கடிக்கப்பட்டு ஒழிக்கப்பட வேண்டும். சுயநம்பிக்கை, பெருமை ஆகியவை சிலுவைக்கு முன்பாக பரிகரிக்கப்பட வேண்டும். நமது முகமூடியைக் கழற்றிவிட்டு அவரது ஒளிக்குள் வரவேண்டும். **நமது பெருமைக்காக எப்போதாவது கண்ணீர் விட்டிருக்கிறீர்களா? இங்கு தான் எழுப்புதல் ஆரம்பமாகிறது.** அவருக்கு முன்பாகத் தாழ்மையோடு வந்து இருதயம் நொறுங்கி ஜெபிக்க அவர் காத்திருக்கிறார். தாழ்மை தேவனுடைய இருதயத்தை நமக்கு நேராக இழுத்து வருகிறது ஏசா.51:15.

**நாம் ஜெபிக்க வேண்டும்:-**

ஜெபம் என்பதற்கான 12 எபிரெய பதங்களில் இங்கு வரும் ஜெபம் என்ற பதம் 'ஒருவர் தன்னை தேவ சமூகத்தில் வழக்கமாக வந்து நியாயந்தீர்ப்பது' என்பதனைக் குறிக்கிறது. 1 பேதுரு 4:17-ல் "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவக்குங்காலமாயிருக்கிறது" என வாசிக்கிறோம். நமது ஜெபக்குறைவிலிருந்து நாம் திரும்ப வேண்டும். அது வேதனையளிக்கலாம், ஆனால் இன்றியமையாதது. நாம் நிலையான மாற்றம் பெற விரும்பாவிட்டால் எழுப்புதலுக்காக ஜெபிக்க முடியாது. அவர் நமது வாழ்வின் ஆண்டவர் என்ற பயத்தோடு தாழ்மையுடன் அவருக்கு முன்பாக வரவேண்டும்.

வேதவசன வெளிச்சத்தில் நமது வாழ்வில் என்ன மாற்றம் தேவை? உடைந்த உள்ளத்தோடும் நேர்மையோடும் நம்மை தேவனுக்கு ஒப்புவிக்கும்போது தேவன் நம்மை ஆராய்ந்து நமது வாழ்வில் மாற்றம் செய்யப்பட வேண்டிய பகுதிகளை நமக்குக் காண்பிப்பார். நாம் அவற்றை ஒத்துக் கொண்டு எந்த எதிர்ப்புகளுமின்றி

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு இணையாக செயல்பட வேண்டும். நொறுங்கிய இருதயத்தோடு மாற்றம் பெற விரும்பும் இருதயம் தேவனை எதிர்ப்பதில்லை. அவருடைய அக்கினிக் கண்கள் நம்மை சோதிக்க நாம் அனுமதிக்க வேண்டும். அப்போஸ்தலர் நடபடி களிலும் சபையின் சரித்திரத்திலும் நிர்பந்தமான நிலையில் உடைந்த உள்ளத்தோடு ஏறெடுக்கப்பட்ட ஜெபங்கள்தான் எழுப்புதலைக் கொண்டு வந்துள்ளன. சீயோன் கனிகொடுக்கு முன் வேதனைப்பட்டு ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். நாம் சரியாக இருக்கிறோமா? அல்லது சரியாக இருப்பதாக எண்ணிக்கொள்கிறோமா?

**அவரது முகத்தைத் தேட வேண்டும்:-**

நாம் அவரது கரத்தையோ, உதவியையோ, வெகுமதியையோ அல்லது ஆசீர்வாதத்தையோ தேடிக் கொண்டிருக்கலாம். ஆனால் நாம் தேவனைத் தேடி அவரை அறிந்துகொள்ள வேண்டும். ஒருவரை நன்கு அறிந்து கொள்ள அவரை நேருக்கு நேர் பார்க்க வேண்டும். 'தேடுதல்' என்பதற்கான எபிரெய பதம் அவரது அழைப்புக்கு புதிதாக கீழ்ப்படிவது அல்லது நெருக்கம் கொள்வது எனப் பொருள்படுகிறது.

**நமது சோம்பலான நிலையிலிருந்து மாற வேண்டும்:-**

"தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் எபி.11:6. இது தேவன்மேலுள்ள பரிசுத்தமான நாட்டம். இதில் அவசரமும், உற்சாகமும் அடங்கியுள்ளன. அவரை அறிந்துகொள்ளவும் கனப்படுத்தவும் ஆசை ஏற்படுகிறது. அவர் பாவத்தைப் பாராத சுத்தக் கண்ணர் ஆப.1:13. எபி.10:22-ன் படி "உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அவரது முகத்தின் பிரகாசத்தில் நடக்க வேண்டும். அவரது உறவின் ஆசீர்வாதத்தை அறிய வாஞ்சிக்க வேண்டும். அவர் பாவத்தைப் பொறுக்காதவர். எனவே மாம்சத்திலும் ஆவியிலும் காணப்படும் எல்லா அழுக்குகளையும் விட்டு நம்மை சுத்திகரிக்க வேண்டும். அவரது இனிய ஆளுகைக்குள் வாழ வேண்டும். சபை தேவனுக்காகவே வாழ வேண்டும்.

**பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்ப வேண்டும்:-**

நாம் சபை அங்கத்தினர் என்ற பெயரில் மரியாதையுடன் வாழ்வதால் நாம் பொல்லாதவர்கள் என்பதை ஒத்துக் கொள்வதில்லை. ஆனால் உண்மையாக நம்மைத் தாழ்த்தி, ஜெபத்துடன் அவர் முகத்தை நாம் தேடும் போது நாம் பலவீனங்கள் என்று எண்ணுகிறவைகள் உண்மையில் 'பொல்லாதவை'கள். பொல்லாங்கு செய்கிறவன் அதைவிட்டு விட்டு அநீதியுள்ளவன் தனது நினைவுகளை விடவேண்டும். நாம் தீமையற்றவை என்று எண்ணுபவை தேவனுடைய தூய தன்மையின்படி பாவமாயிருக்கின்றன. மாசுபடுவதிலிருந்து நாம் விலக வேண்டும். தேவன் காண்பிக்கும் சத்தியத்தின்படி வாழ வேண்டும். தேவ ஆவியானவர் பாவ உணர்வைத் தரும்போது கீழ்ப்படிந்து அவரது சித்தத்தின்படி செயல்பட வேண்டும். அவரது தூய பிரசன்னம் நம்மை தூய்மைப்படுத்தி அவருக்கு மகிமையைக் கொண்டுவரும்.

எழுப்புதலைத் தருபவர் தம்மைத் தாமே நமக்காக அளித்தவர். தனது பழுதற்ற மணவாட்டியை அவர் எதிர்பார்க்கிறார். எங்காயினும், எப்போதாயினும் தேவ ஜனங்கள் தங்கள் முழங்கால்களில் நின்று இந்த வசனத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றினால் தேவன் தமது ஆசீர்வாத வாக்குகளை நிறைவேற்றுவது நிச்சயம். சபை எழுப்புதலைப் பெற்றுக்கொள்ள இந்த ஆயத்தம் நம் ஒவ்வொருவருக்கும் அவசியம்.

"ஆண்டவரே உலகம் உமது மகிமையால் அதிர்ச்சியடையட்டும். மட்டுமல்ல உம்மை அறிந்துகொள்ள வாஞ்சிக்கவும், தேவஜனம் உமது தூய்மையால் தரிப்பிக்கப்படவும் உம் அன்பினால் நிரப்பப்படவும் உதவி செய்யும்."

# மனந்திரும்புதலாகிய ஈவு

***The Gift of Repentance***

Rich Carmicheal

எந்த பாவத்திலிருந்தும் நாம் மனந்திரும்புவதும் கர்த்தருடைய வழியில் முழுவதுமாக நடப்பதும் அவசியம். ஒருபுறமாக பாவம் எத்தனை ஆபத்தானது என்பதை உணர்வதும், எனவே மனந்திரும்புதலும் கீழ்ப்படிதலும் அவசியம் என்பதைக் கண்டுகொள்ள வேண்டும். மறுபுறமாக மனந்திரும்புதல் மற்றும் கீழ்ப்படிதலின் ஆசீர்வாதம் ஆகிய ஈவுகளை முற்றிலுமாகப் பற்றிக் கொள்ள வேண்டும்.

ஆண்டவர் நம்மை அதிகமாக நேசிப்பதோடு நாம் நன்மையானவைகளைப் பெற்றுக்கொள்ளவும் விரும்புகிறார். நமக்கு மிக நன்மையானவை அவரோடுள்ள பூரண உறவு; ஏனெனில் அவரில் ஜீவன், அன்பு, சந்தோஷம், நீதி, சமாதானம், இரட்சிப்பு போன்ற சகல நன்மையானவைகளும் அடங்கியுள்ளன. ஜீவ நீரின் ஊற்றை விட்டு விட்டு நாமே தண்ணீர் நிற்காத மண்பாத்திரங்களை உண்டு பண்ணுகிறோம் எரே.2:13.

**பாவத்தின் கொடுமை**

பாவத்தின் ஆபத்தை நாம் புரிந்து கொள்ளாதது ஒரு பெரிய பிரச்சனை. பாவம் அநித்தியமான பாவ சந்தோஷங்களைத் தருகிறது எபி.11:2-ம் கடைசியில் அது அழிவைத் தருகிறது. அது நம்மை வஞ்சிக்கிறது ரோமர் 7:11, நம்மை அடிமைப்படுத்துகிறது யோவா.8:34, நம்மை சூழ்ந்திருக்கிறது எபி.12:1, கடினப்படுத்துகிறது எபி.3:13 மற்றும் வெட்கத்தையும் நியாயத்தீர்ப்பையும் நம்மீது கொண்டு வருகிறது நீதி.14:34, எபி.10:26-27. பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கிறது யாக்.1:15. பாவத்தின் சம்பளம் மரணம் ரோமர் 6:23.

முக்கியமான காரியம் என்னவெனில் பாவம் ஆண்வருக்கு எதிராயிருந்து நம்மை அவரிடமிருந்து பிரிக்கிறது ஏசா.69:2. தாவீது 51-ம் சங்கீதத்தில் "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்...... உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும். உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும் வச.4,11-12 என்று தாவீது கதறுகிறார்.

தாவீது ஆண்டவரோடுள்ள உறவைத் திரும்பப் பெறும்படி வாஞ்சித்ததுபோல ஆண்டவரும் அதிகமாக அதை வாஞ்சித்தார். தாவீதை அவனது பாவத்தால் அவர் முற்றிலும் உதறித் தள்ளியிருக்கலாம். ஆனால் அவர் நாத்தானை அனுப்பி அவனை உணர்த்தினார் 2 சாமு.12. தாவீது பாவத்தின் விளைவுகளை அனுபவித்தாலும் அவன் உத்தம மனஸ்தாபத்தோடு தேவனிடம் திரும்பி உறவைத் திரும்பப் பெற்றான்.

**மனந்திரும்புதல் வாழ்வுக்கு வழிநடத்துகிறது**

கர்த்தர் நமக்குப் பாவ உணர்வைத் தந்து மனந்திரும்புதலுக்கு அழைப்பது நமக்கு ஒரு ஈவு ரோ.2:4. நாத்தானுடைய வார்த்தைகள் தாவீதுக்குக் கடினமாயிருந்திருக்கலாம். லவோதிக்கேயா சபைக்கு ஆண்டவர் கூறியதை வெளி.3:15-19 வசனங்களில் வாசித்துப் பாருங்கள். அதோடு தொடர்ந்து 20-ம் வசனத்தில் உறவுக்கும், ஐக்கியத்திற்குமான அழைப்பும் கொடுக்கப்படுகிறது. "இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால் நான் அவனிடம் வந்து அவனோடு போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான்.

நமது வாழ்வில் நம்மை சரிப்படுத்துவதற்கான தேவைகள் ஏற்படும் போது அவ்வார்த்தைகளைக் கவனிக்கும் செவிகளை தேவன் தந்தருளுவாராக. நாம் அனைத்து பாவங்களிலுமிருந்து மனந்திரும்பி அவரோடு தாழ்மையுடன் அவரது வழிகளில் நடந்தால் அது நலம். அது ஜீவனுக்கு நம்மை வழிநடத்தும்.

# மனந்திரும்பி ஆண்டவரைத் தேடுங்கள்

***Repent and seek the Lord***

W.C. Moore

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்" மத்.6:33. "கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது" ஓசி.10:12.

"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" யோவா.14:23. இதற்குப் பக்க வழி இல்லை. நாம் அவருக்குக் கீழ்ப்படியாவிட்டால் நாம் அவரை நேசிக்கவில்லை. "ஒருவன் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற் போனால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" 1 கொரி.16:22.

அனேகர் நியாயத்தீர்ப்பு நாளிலே திகைப்புடன் "கர்த்தாவே, கர்த்தாவே உம்முடைய நாமத்தினால் தீர்க்கத்தரிசனம் உரைத்தோமல்லவா!" என்பார்கள். கர்த்தரோ தாம் அவர்களை அறியேன் என்பார். மத்.7:21-23; லூக்.13:23-30 வசனங்களின்படி அனேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் கூடாமற்போகும் என்று பார்க்கிறோம்.

வஞ்சிக்கப்படாதிருங்கள். தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான் கலா.6:7. இவ்வுலக சந்தோஷத்திற்காக வாழ்ந்தால் லாசருவின் உவமையில் கூறப்பட்டது போல நரகத்திலிருந்து கண்களை ஏறெடுத்துப் பார்க்க வேண்டி யிருக்கும். எனவே தேவனை மகிமைப் படுத்துதவற்கேதுவானவைகளையே செய்யுங்கள் 1 கொரி.10:31.

கிறிஸ்துவின் சீஷனாக அவரைப் பின்தொடர எல்லாவற்றையும் விட்டு விட வேண்டும் லூக்.14:33. உங்கள் சரீரத்தை ஜீவனுள்ள பலியாக ஒப்புவிப்பதே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை ரோமர் 12:1. நியாயஞ்செய்து, இரக்கத்தை சினேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நட மீகா.6:8. "வஞ்சிக்கப்படாதிருங்கள் வேசி மார்க்கத்தாரும், விக்கிராகாராதனைக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும் ....... தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை 1 கொரி.6:9-10. "..... நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று" மத்.5:28. "உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்து போடு" மத்.5:29.

ஒரு சினேகிதன் உன்னை இடறச் செய்வானாகில் அவனை விட்டு விட்டு கிறிஸ்துவைப் பற்றிக்கொள். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மாற்.8:36. மிக அருமையான நட்புகளும் தேவனுக்கும் உங்களுக்குமிடையில் வர அனுமதிக்கக் கூடாது. "தன் தகப்பனை யாவது, தன் தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல" மத்.10:37.

எப்படி சொகுசாக வாழலாம் என்றெல்லாம் எண்ணாமல் உங்களை வெறுத்து, கிறிஸ்துவுக்காக என்ன செய்யலாம், மற்றவர்களை எப்படி இயேசுவைப் போல் வாழச் செய்து அவரது வருகைக்கு ஆயத்தப்படுத்தலாம்! என்று எண்ணுங்கள். சிலுவையை எடுத்துக்கொண்டு சந்தோஷமாக இயேசுவைப் பின்பற்றுங்கள் மத்.16:24. கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்பது போல செயல்படுங்கள் ரோமர் 14:10-12. "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" மத்.24:44 "நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் மாற்.13:37. "அந்தநாள் உங்கள் மேல் வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" லூக்.21:34. "கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறதே" யாக்.5:8.

"உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள் 2 பேதுரு 1:10. யூதா 24:25 வசனங்களை வாசிக்க.

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்". தேவனுக்குச் செய்யும் கடமைகளிலும் அவருக்குக் காண்பிக்கும் அன்பு பயபக்தி ஆகியவைகளிலும் முதற்கவனம் செலுத்துங்கள். உலகத்திலுள்ளவைகளிலல்ல மேலானவைகளையே நாடுங்கள் கொலோ.3:2. "நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திரு வசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் யாக்.1:22. "அவர்கள் உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள். ஆனாலும் அவைகளின்படி செய்யாமற் போகிறார்கள்" எசேக்.33:32.

## நம்மை நாமே நிதானித்து அறிவோம்

1 கொரி.11:31-ன்படி நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். ஆனால் நாமோ நம்மைத் தவிர அனைவரையும் நியாயந்தீர்க்கிறோம். எனவே ஆண்டவரின் ஆவியானவர் துக்கப்படுத்தப்படுகிறார். தேவன் நமக்கு அளிக்க விரும்பும் எழுப்புதலை நாம் பெற முடிவதில்லை.

"எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்" லூக்.12:48. சுவிசேஷ ஒளியைப் பெற்ற நாம் இன்னும் பிறரை விமர்சித்து, நியாயந்தீர்த்து குற்றப்படுத்துகிறோம். "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" மத்.7:1. மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள் லூக்.6:37. "மேலும் நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சினேகமுள்ளவர்களும் மன உருக்கமுள்ளவர்களும் இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள்" 1பே.8:5.

எனவே அன்பர்களே, கர்த்தர் வந்து நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும் அவரைத் தேடுவோம்.

"சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கு ..... ஐயோ!" ஆமோஸ் 6:1. "இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்" வெளி.3:16. அவர் வந்து நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது.

# பாவம் என்பது முடிவில்லாத ஒரு தீமை

***Sin is an Infinite Evil***

William S. Plumer

பாவத்தைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்களென்று சொன்னால் நானும், தேவன், கிறிஸ்து தூய ஆவி, தெய்வீக சட்டம், சுவிசேஷம் போன்ற அனைத்து சத்தியங்களைக் குறித்தும் நீங்கள் என்ற நினைக்கிறீர்கள் என்று சொல்ல முடியும். பாவத்தை கட்டுக்கதை, அதிர்ஷ்டமின்மை, ஏமாறுதல் என்றெல்லாம் பார்க்கிறவர்கள் ஆழமான மனந்திரும்புதல் அல்லது பாவநிவாரணம் வேண்டுமென்று கேட்பதில்லை. தன்னில் பாவமில்லை என்று கருதினால் ஒரு இரட்சகருக்குத் தேவையில்லை. தன் இருதயத்தில் தீமை இல்லை என்போருக்கு தங்கள் தன்மையில் மாற்றம் தேவை என்பதை அறிய முடியாது. பாவத்தை எளிதாக எடுத்துக் கொள்பவர்கள் சில சொட்டு கண்ணீர்களோ, வெளிப்படையான சீரமைப்புகளோ போதும் என்றிருக்கிறார்கள்.

பாவத்தின் தீமையைக் குறித்து தேவன் பேசுவதை எரே.2:12-13 வசனங்களில் பார்க்கிறோம். "வானங்களே இதினிமித்தம் பிரமித்துக் கொந்தளித்து மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள், ஜீவதண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்" தேவன் சத்தியபரர். அவர் பேசினவைகள் யாவும் சத்தியமானவை.

மிகவும் பரிதாபமானதும், கசப்பானதுமான கதறல்கள் பாவத்தின் கொடுக்கிலிருந்து அல்லது அதன் வலிமையிலிருந்து விடுவிக்கப்பட ஏறெடுக்கப்பட்டுள்ளன. பாவத்தைக் குறித்து நிர்விசாரமான எண்ணம் கூடாது.

**பாவம் தேவனுக்கு எதிரானது**

யாருக்கு விரோதமாக நாம் பாவம் செய்தோமென்பது முக்கியமானது. "மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவம் செய்தால் நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள். ஒருவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்வானேயாகில் அவனுக்காக விண்ணப்பஞ் செய்யத்தக்கவன் யார்? *1 சாமு.2:25.* தேவன் நம்மை படைத்தவர். அவர் நமது பிதாவும், ஆளுநரும், நியாயாதி பதியுமாயிருக்கிறார். அவர் பரிசுத்தத்தில் மகிமையானவர், துதிகளில் பயப்படத்தக்கவர், அதிசயங்களைச் செய்கிறவர். எல்லா நண்பர்களிலும் மேலானவர். நன்மை செய்கிறதில் அளவற்றவர். இணைப்பில் மரணத்தைவிட உறுதியானவரும் சூரியனைவிட அதிக காலம் வாழக்கூடியவருமாயிருக்கிறார். எனவே நாம் அவரை நேசிக்கவும் கனப்படுத்தவும், அவருக்குப் பயப்படவும் கீழ்ப்படியவும் நாம் கடமைப்பட்டவர்கள். அவருக்கு விரோதமான பாவம் சதாகாலமும் தீமையே. பாவம் என்பது தேவ அரசுக்கு எதிரான புரட்சி. எனவே மக்கள் தங்கள் பாவங்களை சரியாகக் கண்டு கொண்டால் தெய்வீகக் கிருபையை அவர்கள் அதிக உயர்வாக மதிப்பிடுவார்கள். இவ்வாறு தேவ கிருபையைப் பற்றிய மேலான எண்ணம் தங்களைத் தாழ்த்துவதற்கு ஏதுவாகும்.

பாவத்தின் தீய தன்மையை வேதபுத்தகம் அவற்றிற்கு அளிக்கும் பெயர், அதை பயன்படுத்துவோரின் பெயர் ஆகியவற்றை கற்றுக்கொள்வது அவசியம். கீழ்ப்படியாமை, மீறுதல் அக்கிரமம், புத்தியீனம், பைத்தியம், புரட்சி, தீமை, தீயகனி, அசுத்தம், அருவருப்பு, சீர்கேடு, துணிகரம், பிடிவாதம். எதிர்த்து நிற்பது போன்றவை சாபத்துக்குரியவைகள். பொல்லாப்பினால் வரும் கிரியைகள் தீயசெயல்கள், அந்தகாரக் கிரியைகள், செத்த கிரியைகள், மாம்சத்தின் கிரியைகள், பிசாசின் கிரியைகள் போன்றவைகளாகும். பொல்லாப்பு செய்கிறவர்கள், பாவிகள், அநீதி செய்கிறவர்கள், பரிசுத்தமற்றவர்கள், நீதி செய்யாதவர்கள், அசுத்தர், தீயவர், தீயசெயல் செய்பவர், நெறி தவறியவர்கள், நிந்திக்கிறவர்கள், இருளின் பிள்ளைகள், பிசாசின் பிள்ளைகள், நரகத்தின் பிள்ளைகள், நேர்மையற்றவர், விக்கிரகாராதனைக்காரர், தேவனுக்குப் பகைஞர், எல்லா நீதிக்கும் எதிரிகள், தேவனுக்கும் மனுஷருக்கும் பகைஞர், பொய்யர், வஞ்சகர் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்கள்.

தெய்வீக சிந்தையைப் புரிந்து கொள்ளாமையால் பாவத்தின் தீமையை உதாசீனம் செய்வது, ஆவிக்குரிய பெருமை, சுயவஞ்சகம், மற்றும் இயேசுக் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நீதி குறைத்து மதிப்பிடுதல் ஆகியவை. கெத்சமனே, கல்வாரி காட்சிகளைக் கண்டவர்கள் பாவத்தின் கொடுமையை எளிதாக எடுத்துக்கொண்டால் அவர்கள் குருடராயிருக்க வேண்டும். ஆனாலும் மனிதரின் இருதய கடினம் அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையிலிருந்தும் கற்றுக் கொள்ள முடியவில்லை. பெவறிட்ஜ் என்பவர், "மனிதனின் புரிந்து கொள்ளுதல் அந்தகாரப்பட்டுவிட்டபடியால் அவன் தேவனில் தேவனையும், தூய்மையை, தூய்மையிலும், நன்மையை நன்மையிலும், தீமையைத் தீமையிலும், பாவ தன்மையை பாவத்திலும் காண முடியவில்லை. அவ்விருள் அதிகமாயிருப்பதால் அவன் தீமையில் நன்மையையும், நன்மையில் தீமையையும், பாவத்தில் சந்தோஷத்தையும், தூய்மையில் துன்பத்தையும் காண்பதாக எண்ணுகிறான்." நாம் இயற்கையாகவே கண்ணிருந்தும் காணாதவர்களும், செவியிருந்தும் கேளாதவர்களுமாகிய மக்களின் சந்ததியாயிருக்கிறோம். இவைகளின் அடிப்படையில் புருக் என்பவர் "எந்தப் பாவமும் சிறியதாயிருக்க முடியாது. ஏனெனில் நாம் எந்த சிறிய தேவனுக்கும் எதிராகப் பாவம் செய்யவில்லை."

பன்யன் என்பவர் தனது மரண நேரத்தில், "**தேவனுக்கு எதிராக எந்தப் பாவமும் சிறியதாயிருக்க முடியாது. ஏனெனில் பாவம் பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் தேவனாயிருக்கிற மிகப்பெரிய தேவனுக்கு எதிராக செய்யப்படுகிறது**" என்றார்.

ஜாண் ஒயன் என்பவர் "பாவத்தைக் குறித்த நிர்விசார எண்ணமுடையவன் தேவனைக் குறித்த பெரிய எண்ண முடையவனாயிருக்க முடியாது" என்கிறார்.

வெஸ்ட் மினிஸ்டர் கூடுகை கூறும்போது, "எல்லாப் பாவமும் அது மிகச் சிறிதா யிருந்தாலும் அது சர்வ வல்லவருக்கும் நன்மைக்கும், தேவ பரிசுத்தத்திற்கும் அவரது நீதிக்கும் எதிராயிருப்பதால் இந்த உலக வாழ்விலும் வரப் போகிற உலகிலும் கோபத்தையும் சாபத்தையும் வரவழைக்கிறது. கிறிஸ்துவின் இரத்த மின்றி அது பரிகரிக்கப்பட முடியாது" என்கிறது. பவுலின் கருத்துப்படி பாவத்தின் சம்பளம் மரணம் *ரோ.6:23.* கிறிஸோஸ்டம் என்பவர்" "தேவனை துக்கப்படுத்துவதும், அவர் விரும்பாததை செய்வதும் உண்மையாகவே தீமையாயிருக்கிறது என்கிறார்.

"என் பாவத்தை எனக்குக் காண்பியும். எனது இழந்து போன நிலையையும், உமது அன்பையும், இரக்கத்தையும் கூட காண்பியும். உமது பரிசுத்தத்தின் எல்லையையும் உமது கட்டளைகளின் ஆவிக்குரிய தன்மையையும் எனக்குக் காண்பியும். உமது குமாரனை என்னில் வெளிப்படுத்தும். அவரே பாவத்தின் நிவாரணம். அதன் கொடிய விளைவுக்கும் பரிகாரம்."

**ஆகஸ்ட் மாத உபவாச ஜெபம்**

**Heart cry for Holy Spirit Revival**

**எழுப்புதலுக்காக இதய கதறல் 2018**

**(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)**

காலம் : **18.08.2018**
3-வது சனிக்கிழமை
சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை
இடம் : ***Faith Prayer Church***
Nepal Street (Near Periyar Depot)
Kallakurichi, Vilupuram Dist.

தொடர்பு : பாஸ்டர் **L. சாமுவேல்**
மொபைல் : 9976296084

**வங்கி கணக்கு எண்**

VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப் பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**வருகையின் தூதன்**
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
**Mobile:** 95432 21008
**email:**
Varukayinthoothan@hotmail.com

**வருகையின் தூதன்**

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
**Mobile:** 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய நான் வரவில்லை, என்னை அனுப்பினவருடைய சித்தம் செய்யவே வந்தேன்" என்றார். தனது சொந்த சித்தம் செய்ய விரும்பாமல் எல்லா நிலையிலும் தேவசித்தத்தை நிறைவேற்றுவதில் கருத்தாயிருந்தார்.

இத்தகைய கீழ்ப்படிதலுக்காகவே அவர் நம்மை அழைக்கிறார். இந்த முழுமனதோடு கூடிய அர்ப்பணம், எல்லா காரியங்களிலும் கீழ்ப்படியவும் வழிநடத்தவும் வல்லமை தரக்கூடியதாகவுமிருக்கிறது. இப்படி வாழும் ஒரு கிறிஸ்தவன் ஆத்துமாவில் மகிழ்ச்சியும், பெலனும் பெறமுடியும்.

**கிறிஸ்துவில் கீழ்ப்படிதல் ஆழ்ந்த தாழ்மையிலிருந்து எழும்பியது:**

பிலி.2:5-8 வசனங்களை வாசிக்க.

முழுமையாகத் தன்னை வெறுமையாக்க விரும்புகிறவனும், அடிமையாக வாழ விரும்புகிறவனும் "கீழ்ப்படிதலின் அடிமை". தேவனுக்கு முன்பாகவும் மனிதனுக்கு முன்பாகவும் மிகவும் தன்னைத் தாழ்த்துகிறவனும் இயேசுவின் கீழ்ப்படிதலை அதன் பரம அழகுடனும் வல்லமையுடனும் வெளிப்படுத்த முடியும்.

நாம் தேவனுக்கு முன்பாக தாழ்மையுடனும் சாந்த குணத்துடனும், பொறுமையுடனும், முழு சுய சித்தத்தையும் துறந்து தேவனுக்கு முன்பாகப் பணிந்து அவரையே சார்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு சுயத்திலிருந்து திரும்பும்போது மகிமையான தேவனுக்குக் கீழ்ப்படிவது நமது கடமையும் ஆசீர்வாதமுமாயிருக்கிறது என்பது வெளிப்படுத்தப்படும்.

**கிறிஸ்துவில் இந்த கீழ்ப்படிதல் விசுவாசத்தினாலானது:**

"நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்யவில்லை" யோவா.5:30.

"என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்" யோவா.14:10.

குமாரனின் அர்ப்பணம் பிதாவின் வல்லமை அவரில் கிரியை செய்ய ஏதுவாயிருக்கிறது.

நாம் நமது சித்தத்தை தேவனுக்கு விட்டுக்கொடுக்கக் கற்றுக் கொண்டால் அந்த அளவிற்கேற்ப தேவ வல்லமையை நாம் பெற முடியும். முழுமையான கீழ்ப்படிதலுக்கான அர்ப்பணம் முழுமையான விசுவாசத்தால் ஏற்படுகிறது. தேவன் நம்மில் கிரியை நடப்பிப்பார்.

கிறிஸ்துவை உற்றுநோக்கி அவரை அறிந்து, அவரில் விசுவாசம் வைத்து அவர் மிகவும் கீழ்ப்படிதலுள்ளவர் என்று உணருவோம். இந்தக் கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொண்டு, நேசித்து தேடுவோம். அவரது நீதி நமது ஒரே நம்பிக்கையாகவும் அவரது கீழ்ப்படிதல் நமது ஒரே ஆசையாகவுமிருக்கட்டும். அவரிலுள்ள நமது விசுவாசம் அதன் உத்தமத்தையும் அதன் உறுதி தேவனுடைய மேலான வல்லமை நம்மில் கிரியை செய்வதையும் நிரூபிக்கட்டும். இதற்காக கீழ்ப்படிதலுள்ளவரான கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் செயலிலும் அவர் நம்மில் வாழ்வதை வெளிப்படுத்துவோம்.

## பத்திரிகை செய்திகள்

அவமதிப்பு வழக்கு:

# தூத்துக்குடி பேராயருக்கு தண்டனை நிறுத்திவைப்பு

### மதுரை ஐகோர்ட்டு உத்தரவு

மதுரை, ஜூலை 5 - தூத்துக்குடி திருமண்டல பேராயருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்து மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### தேர்தல் வழக்கு

தூத்துக்குடியை சேர்ந்த ஸ்டான்லி வேதமாணிக்கம், துரைராஜ், அரோன், ஆனந்தராஜ் ஆகிய 4 பேரும் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த அவமதிப்பு வழக்கில் கூறியிருந்ததாவது:-

தூத்துக்குடி மாவட்டம் நாசரேத்தில் உள்ள சி.எஸ்.ஐ. திருமண்டல பேராயராக தேவசகாயம் உள்ளார். பொருளாளராக மோகன் அருமைநாயகம் உள்ளார். கடந்த 2012-ம் ஆண்டு தூத்துக்குடி திருமண்டல சபைக்குழு தேர்தல் அறிவிக்கப்பட்டது. இந்த தேர்தலில் எங்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்படுகிறது. நாங்கள் திருமண்டல தேர்தலில் ஓட்டு போட அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும் என்று மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தோம். அதை விசாரித்த ஐகோர்ட்டு எங்களுக்கு ஓட்டுரிமை வழங்கி உத்தரவிட்டது. அந்த உத்தரவு பின்பற்றப்படவில்லை. எனவே திருமண்டல பேராயர், பொருளாளர் மீது அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இதற்கிடையே திருமண்டல சபைக்குழு தேர்தல் நடத்துவதற்கு இடைக்கால தடை விதித்து மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டது. அதையும் மதிக்காமல் தேர்தல் நடத்தியது பற்றியும் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

### சிவில் ஜெயில் தண்டனை

இந்த 2 வழக்குகளையும் நீதிபதி எம்.வி.முரளிதரன் நேற்று காலையில் விசாரித்தார். பின்னர் அவர் பிறப்பித்த உத்தரவில், தூத்துக்குடி திருமண்டல சபைக்குழுவுக்கு நடத்தப்பட்ட தேர்தல் ரத்து செய்யப்படுகிறது. மனுதாரர்களையும் வாக்காளர்கள் பட்டியலில் சேர்த்து தேர்தல் நடத்த வேண்டும். தேர்தல் அதிகாரியாக மாவட்ட நீதிபதி சித்தார்த்தன் நியமிக்கப்படுகிறார். அவர் தேர்தலை நேர்மையாக நடத்த வேண்டும். பேராயர் தேவசகாயம், பொருளாளர் மோகன் அருமைநாயகம் ஆகியோர் கோர்ட்டு உத்தரவை அவமதித்துள்ளனர் என்பது தெளிவாகிறது. அவர்களின் மன்னிப்பை ஏற்க முடியாது. எனவே அவர்களுக்கு தலா 2 வாரம் சிவில் ஜெயில் தண்டனையும், தலா ரூ. 5 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது. அபராத தொகையை 2 வாரத்தில் தலைமை நீதிபதி நிவாரண நிதியில் செலுத்த வேண்டும் என்று கூறியிருந்தார்.

### நிறுத்தி வைப்பு

இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் மீதான தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நேற்று பிற்பகலில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை நீதிபதி விசாரித்து, பேராயர் தேவசகாயம், பொருளாளர் மோகன் அருமைநாயகம் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை 2 வாரத்துக்கு நிறுத்திவைப்பதாக உத்தரவிட்டார்.

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To